10 MAR 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1995 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கடற்றொழில் (திருத்தச்) சட்டம்

---

*(1995 பெப்புருவரி மாதம் 9 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1995, பெப்புருவரி மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : சதம் 30 | தபாற் செலவு : ரூபா 2.00

# 1995 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கடற்றொழில் (திருத்தச்) சட்டம்

கடற்றொழில் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

[1995, பெப்ருவரி மாதம் 9 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 56/94
4230

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கடற்றொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 212ஆம் அத்தியாயத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஐந்நூறு ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஐந்நூறு ரூபாவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்தாயிரம் ரூபாவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, அதற்கான (2) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் "14 ஆம் பிரிவின் கீழான அல்லது 15 ஆம் பிரிவின் கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "14 ஆம் பிரிவின் கீழான அல்லது 15 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்கு அல்லது பைபோன்ற வலைமூலம் மீன் பிடித்தலைத் தடைசெய்கின்ற ஏதேனும் ஒழுங்கு விதியை மீறுகின்ற தவறொன்றுக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,367 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வொராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 215, பொனத்தசலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.